அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

## தமிழ் - ஆண்டு 10

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

இயற்கை எமக்களித்த கொடைகளுள் ஒன்று காடு. இது புவிக்கு மழையைப் பெற்றுத் தருவதாகவும் காட்டு விலங்குகளின் வாழ்விடமாகவும் அமைகிறது. காலநிலைக்கு ஏற்ப பல வகைக் காடுகள் உள்ளன. பெருமரங்கள், செடிகள், கொடிகள், பற்றைகள், புல், பூண்டுகள் போன்றன காடுகளில் காணப்படுகின்றன. இவை புவிக்கு அழகையும் வளத்தையும் சேர்க்கின்றன. ஈழத்தில் காணப்படும் காடுகளில் அரியவகை விலங்குகள் வாழ்கின்றன. மருத்துவத்துக்குப் பயன்படும் பல வகையான மூலிகைச் செடிகளும் காடுகளில் கிடைக்கின்றன.

அனைத்து உயிரிகளும் உயிர்வாழ அகத்தியமான உயிர்வளியைப் பெறுவதற்குக் காடுகளே காரணமாகின்றன. காடுகள் புவியின் தட்பவெப்ப நிலையைச் சீர் செய்ய உதவுகின்றன. உலகளாவிய நிலையில் புவி வெப்பமடைதலைக் குறைப்பதற்கு காடுகளின் உருவாக்கம் காரணமாகிறது. நீரியல் சுழற்சி ஏற்படுவதற்கும் காடுகளே காரணமாகின்றன. காடுகளை அழிக்காது பேணிக்காப்பது மாந்தரின் தலையாய கடமையாகும்.